IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 154/2012 |
| | | P/W's | : | 1 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | Murugayee | CASTE | : | |
| S/O. / W/O. | | RELIGION | : | |
| VILLAGE | | CALLING | : | |
| TALUK | | AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of **26-07-2022**

<u>கு.வி (2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில்) :</u> **26-07-2022**

உங்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள தாவாவில் எந்தெந்த அயிட்ட சொத்துக்கு பாகம் கேட்டுள்ளீர்கள் என்று வழக்கில் சொல்லியுள்ளீர்களா என்றால் நான் சொல்லியுள்ளேன். வழக்கு சொத்திற்குண்டான புல எண்கள் குறித்து தெரியுமா என்றால் நான் படிக்கவில்லை. எனக்கு தெரியாது. உங்கள் தகப்பனாருக்கு எத்தனை பேர்கள் வாரிசுகள் என்றால் என்னுடைய சகோதரர் சேவி, என்னுடன் பிறந்த சகோதரிகள் வேலாயி, சரஸ்வதி, தனலட்சுமி, நான் ஆகியோர்கள் ஆவோம். உங்களுக்கு திருமணம் ஆகி எத்தனை வருடங்கள் இருக்கும் என்றால் சுமார் 40 ஆண்டுகள் இருக்கும். கடந்த 40 வருடங்களாக தாவா சொத்தில் நீங்கள் எந்த காலத்திலும் அனுபவம் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். உங்களது தகப்பனார் எப்போது இறந்தார் என்றால் எனக்கு சரியாக தெரியாது. உங்களது திருமணத்திற்கு உங்களது தகப்பனாரால் சீர்வரிசைகள் வெகுவாக செய்யப்பட்டு திருமணம் உங்களுக்கு செய்து வைக்கப்பட்டது என்றால் அது சரியல்ல. சீர்வரிசைகள் எதுவும் செய்யவில்லை. தாவா சொத்து அமைந்துள்ள ஊரில் தான் உங்களது சகோதரிகள் உள்ளார்கள் என்றால் சரிதான். உங்களது சகோதர சகோதரிகள் தான் தாவா சொத்தில் அனுபவத்தில் உள்ளார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் உங்களை தவிர மற்றவர்கள் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறார்கள். உங்களுடைய பங்சை நீங்கள் பெற்றுக்கொண்டு சென்றுவிட்டீர்கள். அதனால் தாவா சொத்தில் எந்தவித பங்கும் கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் அவ்வாறு சொல்வது சரியல்ல. தாவா சொத்தில் உங்களுடைய பங்கிற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை, உங்களுக்கு தாவா சொத்தில் பங்கு எதுவும் இல்லாததால் தான் ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் அவ்வாறு சொல்வது

சரியல்ல. தாவா சொத்துக்கள் பிரதிவாதிகள் தான் முழுமையாக அனுபவ சுவாதீனத்தில் இருந்து வருவதால் உங்களுக்கு எந்தவித பரிகாரமும் கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் அவ்வாறு சொல்வது சரியல்ல. தாவா சொத்தில் உங்களுக்கு உரிமை இருந்திருந்தால், பிரதிவாதிகளை இந்த வழக்கின் வாதிகளாக சேர்த்திருப்பீர்கள் என்றும், அவ்வாறு உரிமையில்லாத காரணத்தினால் தான் பிரதிவாதிகளாக சேர்த்துள்ளீர்கள் என்று சொன்னால் அவ்வாறு சொல்வது சரியல்ல.

(ஒம்.) திரு. T. கோகுலகிருஷ்ணன், பி.ஏ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி